பக்கங்கள்: 05

# தீம்புனல்

THEEMPUNAL

மாலைப் பதிப்பு

theempunaldaily@gmail.com | தீ : 01 | புனல்:63 | 02.02.2024 வெள்ளிக்கிழமை | வள்ளுவர் ஆண்டு 2054




# அரசியல் கட்சி தொடங்கினார் விஜய்



தமிழகத்தின் உச்சம் தொட்ட நடிகரான விஜய் அரசியல் நீரோட்டத்தில் கலந்தார். தமிழக வெற்றிக் கழகம் என்ற பெயரில் இன்று அரசியல் கட்சியைப் பதிவு செய்துள்ளார்.

2026 சட்டசபை தேர்தலை இலக்காக வைத்து களம் இறங்கி உள்ளதாக அறிவித்துள்ளார்

விஜய் அரசியலுக்கு 2021 ஆம் ஆண்டு நடந்த நகர்புற உள்ளாட்சி தேர்தல் முடிவுகள் முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது. வெறுமனே ரசிகர்களாக மட்டும் களமிறங்காமல் தேடித்தேடி பல்வேறு சுயேட்சை வேட்பாளர்களை இணைத்து கணிசமான வெற்றியினை விஜய் மக்கள் இயக்கம் பெற்றது. இரண்டு உள்ளாட்சி மன்றத் தலைவர்கள், 12 உள்ளாட்சி மன்ற துணைத் தலைவர்கள் உள்ளிட்ட 129 பேர் வெற்றி பெற்றனர்.

விஜய் அரசியலில் ஏற்படுத்தப் போகும் தாக்கம் என்ன என்பது இனிமேல் தான் தெரியும்.

விஜய் மக்கள் இயக்கத்தில் விஜய் தவிர அனைவருமே அரசியலுக்கு புதியவர்கள் ஆவர். அவர்கள் இயக்கத்தில் இனிமேல் தான் இரண்டாம் கட்டத் தலைவர்கள் உருவாவார்கள் என்பதால் பெரும் எதிர்பார்ப்பு எழுந்துள்ளது.

விஜய் கட்சியின் கொள்கை (சித்தாந்தம்) என்ன என்பது குறித்தும் எதிர்பார்ப்பு நிலவுகிறது. விஜய் விரைவில் செய்தியாளர்களைச் சந்திப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. தமிழ் சினிமாவில் முன்னணி நடிகராக இருந்து வருபவர் நடிகர் விஜய். சமீபகாலமாக இவரது செயல்பாட்டில் மாற்றம் ஏற்பட்டது.

கடந்த ஆண்டு 10, 12 ஆம் வகுப்பு பொதுத்தேர்வில் அதிக மதிப்பெண் எடுத்த மாணவ-மாணவிகளை நேரில் அழைத்து பாராட்டினார். அதன்பிறகு நெல்லை, தூத்துக்குடி மழை வெள்ளத்தால் மூழ்கிய நிலையில் நடிகர் விஜய் நலத் திட்ட உதவிகளை நேரில் வழங்கினார்.

விஜய் தனது விஜய் மக்கள் இயக்க நிர்வாகிகளுடன் தொடர்ந்து ஆலோசனை நடத்தி வந்தார். மாநிலத்தில் உள்ள 234 தொகுதிகள் குறித்த முழு விபரங்களை அவர் சேகரித்தார். இதனால் நடிகர் விஜய் விரைவில் அரசியலுக்குள் நுழையலாம் என்ற பேச்சுக்கள் எழுந்தன. மேலும் இந்திய தேர்தல் ஆணையத்தில் நடிகர் விஜய் தனது அரசியல் கட்சியை பதிவு செய்ய உள்ளதாகவும் கடந்த சில நாட்களாக தகவல்கள் பரவின.

இந்த நிலையில் தான் நடிகர் விஜய் புதிய கட்சி தொடங்கி அரசியலுக்குள் நுழைவதை உறுதி செய்துள்ளார். அதாவது இன்று நடிகர் விஜய் தனது அரசியல் கட்சியின் பெயரை அதிகார பூர்வமாக அறிவித்துள்ளது. ‘தமிழக வெற்றி கழகம்’ (Tamilaga Vettri Kazhagam) என நடிகர் விஜய் தனது கட்சிக்கு பெயர் சூட்டியுள்ளார். இதன் தலைவராக நடிகர் விஜய் உள்ளார்.

# வவுனியாவில் ஆக்கிரமிப்பு கடைகள் அகற்றம்



வவுனியா சந்தை சுற்று வட்ட வீதியை ஆக்கிரமித்து அமைக்கப்பட்டிருந்த நடைபாதை வியாபார நிலையங்கள் நகரசபையால் இன்று வெள்ளிக்கிழமை (02) அகற்றப்பட்டது.

வவுனியா பொது வைத்தியசாலை சந்தியிலிருந்து கொறவப்பொத்தான வீதி மற்றும் சந்தை உள்வட்ட வீதி ஆகியவை நடைபாதை வியாபாரிகளால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக பாதசாரிகள் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றனர். அதோடு இதனால் அடிக்கடி வாகன நெரிசல் ஏற்பட்டுவருவதுடன், விபத்துக்களை சந்திக்கும் நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

நடைபாதைகளை ஆக்கிரமித்து வியாபாரம் மேற்கொள்ளப்படுவதால் பாதசாரிகள் பிரதான வீதியால் நடந்து செல்ல வேண்டிய அவலநிலைமையும் ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பில் நகரசபை கண்டுகொள்ளாததால், தினந்தோறும் நடைபாதையினை ஆக்கிரமிக்கும் வியாபார நிலையங்கள் அதிகரித்து செல்கின்றது.

இந்நிலையில் சந்தைசுற்று வட்ட வீதிக்கு வெள்ளிக்கிழமை (02) சென்ற வவுனியா நகரசபை உத்தியோகத்தர்கள் மற்றும் போக்குவரத்து பொலிஸார் நடைபாதை வியாபார நிலையங்களை அகற்றியதுடன், வியாபாரிகளின் பொருட்களையும் பறிமுதல் செய்தனர்.

இதேவேளை கொறவப் பொத்தான வீதியில் அமைந்துள்ள நடைபாதை விற்பனை நிலையங்களையும் அகற்ற நகரசபை நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கைவிடுத்துள்ளனர்.

# பணிப்புறக்கணிப்பால் நோயாளர்கள் பெரும் அவதி

சுகாதாரத்துறையினரின் பணிப்புறக்கணிப்பு போராட்டம் இன்றும் இரண்டாவது நாளாக தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படுகின்ற நிலையில் நோயாளர்கள் பெரும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

வைத்தியர்களுக்கு வழங்கப்பட்டு வரும் 30 ஆயிரம் ரூபா கொடுப்பனவை தங்களுக்கும் வழங்குமாறு கோரி 72 சுகாதார சங்கங்கள் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தை ஆரம்பித்துள்ளன. இதன் காரணமாக வவுனியா வைத்தியசாலை நடவடிக்கைகளும் முடங்கியுள்ள நிலையில் சேவையை பெறவந்த நோயாளிகள் ஏமாற்றமடைந்துள்ளனர்.

# நடிகை பூனம் பாண்டே புற்றுநோயால் உயிரிழப்பு

புற்றுநோய் காரணமாக பிரபல நடிகை பூனம் பாண்டே உயிரிழந்ததாக தகவல்கள் வெளியாகியுள்ளது. உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்தவரான பூனம் பாண்டே, பிரபல மாடல் அழகி ஆவார். 2011 ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கோப்பை போட்டியில் வென்றால் நிர்வாணமாக மைதானத்தில் வலம் வருவேன் எனக் கூறி பரபரப்பை ஏற்படுத்தியவர் பூனம் பாண்டே.

தொடர்ந்து 2013 ஆம் ஆண்டு 'நஷா' எனும் படத்தின் மூலம் பாலிவுட் சினிமாவில் அறிமுகமான பூனம், அதன் பிறகு தனக்கென தனியாக இணையத்தளம் தொடங்கி அதில் அரை நிர்வாணப் புகைப்படங்களைப் பதிவிட்டு விமர்சனங்களை சந்தித்து வந்தார். மேலும் தன் சமூக வலைத்தளப் பக்கத்திலும் ரசிகர்களுடன் உரையாடியும் புகைப்படங்கள் பகிர்ந்தும் ஆக்டிவ்வாக வலம் வந்தார்.


## கிருபா லேணர்ஸ்

කිරුබා ලර්නර්ස් KIRUBAA LEARNERS

அரச அங்கிகாரம் பெற்ற வட மாகாணத்தின் முதல் தர கனரக வாகன பயிற்சிப் பாடசாலை.



அ.கிருபாகரன்
-அதிபர்-

- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- இரவிலும் வாகன பயிற்சிகள்.




தலைமையகம்
226, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 4353 / 0777 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

சுன்னாகம் 021 224 2022
நெல்லியடி 021 226 0700
பருத்தித்துறை 021 226 1100
ஆவரங்கால் 021 222 6688
சித்தங்கேணி 021 225 2500
சாவகச்சேரி 021 227 0700
பூநகரி 021 320 1818
முழங்காவில் 021 300 6544
விஸ்வமடு 021 320 1515
மன்னார் 023 225 1656
கிளிநொச்சி 021 228 5505
வவுனியா 024 222 7777

"அகலாது அணுகாது தீக்காய்வார் போல்க
இகல்வேந்தர்ச் சேர்ந்தொழுகு வார்"
கனகசபை கட்டடத் தொகுதி,
பருத்தித்துறை வீதி, நெல்லியடி.
தொ.பே.: 021 226 07 05
www.theempunal.com
theempunaldaily@gmail.com
தீம்புனல் THEEMPUNAL

# பல்கலைக்கழக அரசியல்

இலங்கையில் மிக அதிகமான போராட்டங்களை நடத்தியவர்களில் பல்கலைக்கழக மாணவர்களும் அடங்கும். பல்கலைக்கழக மாணவர்கள் போராடுவதும் படையினர் அதனை அடக்குவதும் நாளாந்த நிகழ்ச்சியாக மாறிவிட்டது. மாணவர்களின் போராட்டத்துக்கான காரணங்களை ஆராய்ந்தால் போராட்டங்களைத் தவிர்க்கலாம்.

பல்கலைக்கழக அமைப்பில் இருந்து வரும் அனைத்து அரசியல்வாதிகளுக்கும் எதிரான விரோதப் போக்கு, பல்கலைக்கழக அமைப்பில் நிலவும் பிரச்சினைகளுக்கு (அரசியல் வாதிகள்) தீர்வு காண இயலாமையே பிரதான காரணமாகும் என்றும், அதனால் மாணவர்கள் மற்றும் பல்கலைக்கழகங்கள் என்றும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

நாடு முழுவதிலும் உள்ள பல்கலைக்கழகங்களில் அண்மையில் இடம்பெற்ற போராட்டங்கள், பல்கலைக்கழக அமைப்பில் உள்ள பிரச்சினைகளுக்கு அரசியல்வாதிகள் கண்மூடித்தனமாக இருப்பதன் மூலம் தூண்டப்படுகிறது. மாணவர்களுக்கோ ஆசிரியர்களுக்கோ அரசியல்வாதிகளுடன் தனிப்பட்ட முரண்பாடுகள் இல்லை. ஆனால், அரசியல்வாதிகளின் முடிவில் இருந்து காட்டப்படும் அதீத பொறுப்பற்ற தன்மையே போராட்டங்களைத் தூண்டுகின்றன.

அரசியல்வாதிகள் விழாக்களுக்காக பல்கலைக்கழகங்களுக்குச் செல்லலாம். அவ்வாறு செய்ய அவர்களுக்கு உரிமை உண்டு. ஆனால், பல்கலைக்கழக அமைப்பின் பாரதூரமான பிரச்சினைகளுக்கு தீர்வு வழங்காமல் கொண்டாட்டங்களில் கலந்துகொள்ளும் தார்மீக உரிமை அவர்களுக்கு இல்லை. அரசியல்வாதிகள் மீதான குறிப்பிட்ட விரோதம் அதன் விளைவாக வருகிறது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அண்மையில் களனி பல்கலைக்கழகத்திற்கு விஜயம் செய்ததற்கு எதிரான போராட்டம் தொடர்பில் பேராசிரியர் ஜயவர்தன தெரிவிக்கையில், அரச உத்தியோகத்தர்கள் அரச பல்கலைக்கழகங்களுக்கு செல்வதில் பிரச்சினை இல்லை என FUTA நம்புவதாகவும். அரச பல்கலைக்கழகங்களின் பிரச்சினைகளைத் தீர்க்காமல் வரும் போது , மாணவர்களும் போராட்டம் நடத்த உரிமை உண்டு.

சில பல்கலைக்கழகங்கள் அரசியல்வாதிகள் மற்றும் ஜனாதிபதி வேட்பாளர்களை பல்கலைக்கழகங்களுக்கு அழைக்க திட்டமிட்டுள்ளதாக அண்மையில் குற்றஞ்சாட்டிய உயர்கல்வி இராஜாங்க அமைச்சர் கலாநிதி சுரேன் ராகவன், இவ்வாறான நகர்வுகள் நிறுத்தப்பட வேண்டும் என கருத்துத் தெரிவித்தார். "பல்கலைக்கழகங்கள் கல்வி நடவடிக்கைகளுக்காக மட்டுமே அரசியலை பல்கலைக்கழக வளாகத்தில் இருந்து விலக்கி வைக்க வேண்டும்" என்று ராகவன் கூறினார்.

இதேவேளை, எந்தவொரு கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர்களின் பங்கேற்புடன் பல்கலைக்கழக வளாகத்திற்குள் நடத்தப்படும் எந்தவொரு அரசியல் கூட்டத்திற்கும் தாம் எதிரானது என அனைத்து பல்கலைக்கழக மாணவர் சம்மேளனம் (IUSF) மீண்டும் வலியுறுத்தியுள்ளது. மாணவர்களின் தொடர்ச்சியான மனக்குறைகள் அரசியல் உயரடுக்கினால் புறக்கணிக்கப்படும் வேளையில், எந்தவொரு அரசியல்வாதிக்கும் பல்கலைக்கழகங்களுக்கு வருவதற்கு தார்மீக உரிமை இல்லை என்றும், எந்தவொரு ஜனாதிபதி வேட்பாளரையும் பல்கலைக்கழகங்களுக்குள் கூட்டங்களை நடத்த அனுமதிக்க மாட்டோம் என்றும் IUSF குறிப்பிட்டுள்ளது.

பல கோரிக்கைகளை முன்வைத்து, களனிப் பல்கலைக்கழகத்தின் 350க்கும் மேற்பட்ட மாணவர்கள் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தை சுற்றிவளைத்து போராட்டத்தில் ஈடுபட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

களனி பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் இரவும் பல்கலைக்கழகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டம் ஒன்றை நடத்தியதுடன், இதனால் கொழும்பு பிரதான வீதியின் போக்குவரத்தும் தடைப்பட்டது. போராட்டத்தைக் கலைக்க பொலிஸார் நீர்த்தாரை மற்றும் கண்ணீர்ப் புகை குண்டுகளை பிரயோகித்ததையடுத்து மாணவர் செயற்பாட்டாளர்கள் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தை முற்றுகையிட்டு நேற்று இரவு போராட்டத்தை தொடர்ந்தனர். அரசாங்கம் உடனடியாக மாணவர்களின் பிரச்சினைக்கு முடிவு கட்ட வேண்டும்.

# நாம் தமிழர் கட்சி நிர்வாகிகளின் வீடுகளில் சோதனை




தமிழ்நாடு முழுவதும் நாம் தமிழர் கட்சி நிர்வாகிகள் வீட்டில் என்.ஐ.ஏ. அதிகாரிகள் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

நாம் தமிழர் வெளிநாடுகளில் இருந்து நிதிபெற்றது தொடர்பாக இந்தச் சோதனை நடைபெற்றன.

கடந்த சில மாதங்களாக இந்தியாவின் பல மாநிலங்களில், குறிப்பாக தமிழகத்தில் தொடர்ச்சியாக NIA சோதனை நடைபெற்று வருகிறது.

தீவிரவாதத்தை தடுப்பது, வெளிநாடுகளில் இருந்து தவறான முறையில் நிதி பெறுவது போன்ற குற்ற சம்பவங்களில் ஈடுபடுபவர்களை கண்காணிப்பதும், அவர்களை கைது செய்வதும்தான் என்.ஐ.ஏவின் முக்கிய பணி.

இந்த நிலையில்தான் நாம் தமிழர் கட்சியினரின் வீடுகளில் சோதனை நடைபெறுகிறது.

குறிப்பாக, நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளரும், சீமானின் நெருங்கிய நண்பருமான சாட்டை துரைமுருகனின் வீட்டில் சோதனை நடைபெற்றது.

# நைரோபி எரிவாயு நிறுவன தீ விபத்தில் இருவர் பலி



கென்யாவின் தலைநகர் நைரோபியில் எரிவாயு வெடித்ததில் இருவர் இறந்துள்ளனர், குறைந்தது 165 பேர் படுகாயமடைந்தனர்.

நைரோபியின் எம்பகாசி பகுதியில் உள்ள ஒரு எரிவாயு நிரப்பும் நிறுவனத்தில், இந்த பயங்கர தீ விபத்து ஏற்பட்டதாகவும், விபத்தில் நிறுவனத்தின் கட்டடம் மோசமாக சேதமடைந்துள்ளதாகவும், எக்ஸ் தளத்தில் செய்தித் தொடர்பாளர் பதிவிட்டுள்ளார்.

சமூக ஊடகங்களில் பகிரப்பட்ட ஒரு வீடியோ, இந்த விபத்தின் போது நடந்த ஒரு ஹாஸ் வெடிப்பை படம்பிடித்துள்ளது. எதிர்பாராத நேரத்தில், அந்த நிறுவனத்தில் உள்ள எரிவாயு சேமித்து வைத்திருந்த கிடங்கு ஒன்று பயங்கர சத்தத்துடன் வெடித்தது.

விபத்தில் காயமடைந்தவர்கள் மருத்துவமனைக்கு மாற்றப்பட்டுள்ளதாக விசாரணை அதிகாரிகள் தெரிவித்தனர்.

# வாரத்தில் 4 நாட்கள் மட்டுமே வேலை

ஜேர்மனியில் நாளை முதல் வாரத்திற்கு 4 நாட்கள் வேலை செய்யும் முறையை கடைப்பிடிக்க திட்டமிடப்பட்டுள்ளது. கடும் பொருளாதார வீழ்ச்சியில் சிக்கியுள்ள ஜேர்மனி, அதிலிருந்து மீள கடும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது. உலகின் வளர்ந்த நாடுகளான டென்மார்க், நெதர்லாந்து, அவுஸ்திரேலியா, பெல்ஜியம், ஸ்பெயின், இங்கிலாந்து, ஜப்பான் உள்ளிட்ட வளர்ந்த நாடுகள் மிகவும் குறைவான வேலை நேரத்தை கடைப்பிடிக்கின்றன.

இந்தத் திட்டத்தின் முயற்சியாக நாளை முதல் வாரத்தில் 4 நாட்கள் வேலையும் 3 நாட்கள் விடுமுறையும் அளிக்க ஜேர்மனி முடிவு செய்துள்ளது.

இவ்வாறு குறைந்த வேலை நாட்களை கடைப்பிடிப்பதன் மூலம் பணியாளர்களின் உடல் மற்றும் மனது புத்துணர்ச்சி அடைந்து செயலாக்கம் அதிகரிக்கும் என ஜேர்மனி அரசு எதிர்பார்க்கிறது.

முன்னதாக வாரத்தில் 4 நாட்கள் மட்டும் வேலை செய்யும் திட்டத்தை நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்று அந்நாட்டின் தொழிலாளர் சங்கங்கள் அரசிடம் கோரிக்கை வைத்திருந்தன. இந்த நிலையில் அமுலுக்கு வரும் இந்தத் திட்டம், நல்ல பொருளாதார மாற்றத்தைக் கொடுக்கும் என தொழிற்சங்கங்களும் ஜேர்மனி அரசும் மிகவும் ஆவலுடன் எதிர்பார்த்து காத்திருக்கின்றன.

# புட்டினின் ஆறு வருட வருமானம்



ரஷ்யாவின் ஜனாதிபதியாக ஆறு ஆண்டு காலத்தில் விளாடிமிர் புட்டின் 1 மில்லியன் டொலருக்கும் குறைவாகவே சம்பாதித்துள்ளதாக தேர்தல் ஆணைய ஆவணங்களை மேற்கோள்காட்டி நியூஸ் வீக் தெரிவித்துள்ளது.

மார்ச் மாதம் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறவுள்ளதையொட்டி தான் சம்பாதித்த சொத்துகள் குறித்த விபரங்களை ரஷ்ய தேர்தல் ஆணையத்திடம் புட்டின் தாக்கல் செய்துள்ளார். அதில், ரஷ்ய ஜனாதிபதியாக 2018 முதல் 2024 வரையிலான 6 ஆண்டு காலத்தில் 67.6 மில்லியன் ரூபிள் அதாவது 7,53,000 டொலர் புட்டினுக்கு வருவாயாகக் கிடைத்துள்ளது. இதில், வங்கி வைப்புத் தொகை, அவரது இராணுவ ஓய்வூதியம் மற்றும் சொத்து விற்பனையின் வாயிலாகக் கிடைத்த பணமும் அடங்கும்.

# லிற்றோ எரிவாயுவின் விலையில் மாற்றம் இல்லை

லிற்றோ எரிவாயு விலையில் இம்மாதம் எவ்வித மாற்றமும் மேற்கொள்ளப்படமாட்டாது என இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட லிற்றோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

பொது மக்கள் எதிர்கொண்டுள்ள பல்வேறு இன்னல்கள் காரணமாக இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இம்மாதத்திலும் விலை அதிகரிப்பு காணப்பட்ட போதிலும் நிறுவனம் நட்டத்தை தாங்கிக்கொண்டு மக்களுக்கு நிவாரணம் வழங்க தீர்மானித்துள்ளதாகவும் லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்தார்.

# குத்தகை நிறுவனத்தில் கொள்ளை





சிலாபத்திலுள்ள பிரதான குத்தகை நிறுவனமொன்றின் கிளையின் பெட்டகத்தை உடைத்த கொள்ளையர்கள், அதிலிருந்து சுமார் 71 இலட்சம் ரூபா பணத்தை திருடிச் சென்றுள்ளதாக சிலாபம் தலைமையக பொலிஸார் தெரிவித்தனர்.

குத்தகைக் நிறுவனத்திற்குள் நுழைந்த கொள்ளையர்கள் குழுவொன்று சுவர்களை உடைத்து உள்ளே நுழைந்ததாகவும் அதன் பின்னர் பல மணித்தியாலங்கள் அங்கு தங்கியிருந்து இயந்திர கிரைண்டரைப் பயன்படுத்தி இரண்டு பெட்டகங்களை வெட்டி அதிலிருந்த பணத்தை எடுத்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இன்று காலை குத்தகை நிறுவன ஊழியர்கள், கடமைக்காக வந்த போது, தமது நிறுவனத்தின் பெட்டகங்கள் உடைக்கப்பட்டு பணம் எடுத்துச் செல்லப்பட்டிருந்ததை அவதானித்ததுடன், இதுபற்றி பொலிஸாருக்கு அறிவித்தனர்.

சிலாபம் தலைமையக பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# புலமைப்பரிசில் வெட்டுப்புள்ளிகள் வெளியீடு

2023 ஆம் ஆண்டுக்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சைக்கமைய,சிங்களம் மற்றும் தமிழ் மொழி மூலங்களுக்கான பாடசாலை வெட்டுப்புள்ளிகள் வெளியிடப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இப்பாடசாலை வெட்டுப் புள்ளிகளுக்கு அமைய, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்களை, 6 ஆம் தரத்துக்காக பிரபல பாடசாலைகளில் சேர்க்கும் செயன்முறை பின்பற்றப்படுகிறது.

# பஸ் கட்டணம் அதிகரிக்கப்படமாட்டாது

டீசல் விலை அதிகரிக்கப்பட்டாலும் பஸ் கட்டணம் அதிகரிக்கப்படாது என தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

டீசலின் விலை 5 ரூபாவினால் அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும், பஸ் கட்டணத்தை அதிகரிப்பதற்கு இடமில்லை என தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் சஷி வெல்கம தெரிவித்துள்ளார்.

பஸ் கட்டணம் தொடர்பில் தற்போதுள்ள சட்டங்கள் மற்றும் உடன்படிக்கைகளின் பிரகாரம் தற்போதைக்கு பஸ் கட்டணத்தை உயர்த்த முடியாது எனவும் பஸ் கட்டணத்தை உயர்த்த வேண்டுமாயின் உடன்படிக்கைகளின் பிரகாரமே மேற்கொள்ளப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பஸ் கட்டணத்தை உயர்த்துமாறு இதுவரை எவரும் கோரிக்கை விடுக்கவில்லை எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# உறுமய தேசிய செயற்பாட்டு செயலகம் திறப்பு



செத்தம் வீதியில் உள்ள பழைய ஸ்டாண்டர்ட் சார்ட்டர்ட் கட்டடத்தில் அமைக்கப்பட்ட உறுமய தேசிய செயற்பாட்டு செயலகம் நேற்று (01) ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்கவினால் திறந்து வைக்கப்பட்டது.

மக்களின் காணி உரிமையை உறுதிப்படுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் எண்ணக்கருவிற்கமைய 20 இலட்சம் விவசாயக் குடும்பங்களுக்கு முழு உரிமையுடைய காணி உறுதிப்பத்திரங்களை வழங்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

உறுமய வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக இவ்வருட வரவுசெலவுத் திட்டத்தில் இரண்டு பில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதுடன், காணி அபிவிருத்தி கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட காணி அனுமதிப்பத்திரங்கள் அனைத்தும் காணி உறுதிப் பத்திரங்களாக மாற்றப்பட்டு அவற்றை பயன்படுத்திய விவசாயிகளுக்கு வழங்கப்படும்.

# மாலைதீவு நோயாளிகளுக்கு இலங்கையில் சிகிச்சை

மாலைதீவு மக்களுக்கு ஏற்படும் விபத்துக்கள், நோய்களுக்கான சிகிச்சைக்காக இலங்கையில் உள்ள மருத்துவமனைகளுக்கு அனுப்ப மாலைதீவு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாம்.

அதற்கான விமான போக்குவரத்து சேவையை தொடங்க இரு நாட்டு அரசுகளுக்கும் இடையே பேச்சுவார்த்தை நடத்தப்பட்டுள்ளது.

முன்னதாக மாலைதீவு மக்கள் அவசர சிகிச்சை பெறுவதற்காக இந்தியா சென்றிருந்த போதிலும், புதிய வேலைத்திட்டத்தின் கீழ் மாலைதீவு மற்றும் கட்டுநாயக்காவிற்கு இடையில் விமான அம்புலன்ஸ் சேவை மார்ச் மாதம் முதல் ஆரம்பிக்கப்படவுள்ளது.


# அதிவிசேட வர்த்தமானியில் பாணின் நிறை

ஒரு இறாத்தல் பாண், அரை இறாத்தல் பாணின் நிர்ணயிக்கப்பட்ட எடையைக் குறிப்பிடும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலை நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ளது.

அதன்படி, ஒரு இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 450 கிராமாக இருக்க வேண்டும் என்றும் அதன் மாறுபாடு 13.5 கிராமிற்கு குறையாமல் இருக்க வேண்டும் என குறித்த வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அரை இறாத்தல் பாணின் பரிந்துரைக்கப்பட்ட எடை 225 கிராமாக இருக்க வேண்டும் எனவும் அதன் மாறுபாடு 09 கிராமுக்கு குறையாமலிருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, விற்பனைக்கு காட்சிப்படுத்தப்படும் பாணின் எடை தெளிவாக காணக்கூடிய வகையில் இருக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மெர்சிடஸை விட்டு ஃபெராரிக்கு செல்கிறார்

# லூயிஸ் ஹமில்டன்

ஏழு முறை ஃபார்முலா வன் உலக சாம்பியனான லூயிஸ் ஹமில்டன் அடுத்த ஆண்டு பெராரிக்குச் செல்கிறார். *2024* சீசனின் முடிவில் ஹமில்டன் மெர்சிடஸை விட்டு வெளியேறுகிறார்.

"கடந்த ஆகஸ்டில் அறிவிக்கப்பட்ட ஒப்பந்தத்தில் வெளியீட்டு விருப்பத்தை லூயிஸ் செயல்படுத்தியுள்ளார், எனவே இந்த சீசன் சில்வர் அரோஸிற்கான அவரது கடைசி ஓட்டமாக இருக்கும்" என்று மெர்சிடிஸ் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

"இந்த அணியுடன் நான் *11* வருடங்கள் அற்புதமாக விளையாடி வருகிறேன், நாங்கள் ஒன்றாகச் சேர்ந்து சாதித்ததை நினைத்து நான் மிகவும் பெருமைப்படுகிறேன். மெர்சிடிஸ் எனது *13* வயதிலிருந்தே எனது வாழ்க்கையின் ஒரு அங்கமாக இருந்து வருகிறது. இது நான் வளர்ந்த இடம். வெளியேறும் முடிவு நான் எடுக்க வேண்டிய கடினமான முடிவுகளில் ஒன்றாகும்" என்று ஹாமில்டன் கூறினார். "ஆனால் நான் இந்நடவடிக்கையை எடுக்க சரியான நேரம் மற்றும் நான் ஒரு புதிய சவாலை எடுப்பதில் மகிழ்ச்சியடைகிறேன்."

பிரிட்டன் மற்றும் இத்தாலியில் பல அறிக்கைகளின் படி, *39* வயதான ஹமில்டன் வருகையை பெராரி உறுதிப்படுத்தியது.

"பல ஆண்டு ஒப்பந்தத்தில் லூயிஸ் ஹமில்டன் *2025* ஆம் ஆண்டில் அணியில் சேருவார் என்பதை ஃபெராரி அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறது" என்று இத்தாலிய அணி அறிக்கையில் தெரிவித்துள்ளது.



## சரா பெனல் நடுவராக
## சிஹான் சுஹூட் தரமுயர்வு




திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் சங்கத்தினூடாக தரமுயர்வில் பங்குபற்றிய சிஹான் சுஹூட் வடக்கு மற்றும் கிழக்கு மாகாண ரீதியில் முதல் இடத்தினையும், தேசிய ரீதியில் நான்காவது இடத்தினையும்பெற்று திருகோணமலை மாவட்ட கிரிக்கெட் வரலாற்றில் முதலாவது சரா பெனல் நடுவர் என்ற வரலாற்று ரீதியான சாதனையைப் படைத்துள்ளார். இலங்கை கிரிக்கெட் நடுவர் குழாம் தரம் *4* இல் இருந்து தரம் *3* க்கான தரமுயர்வு போட்டி தேர்வு கடந்த வருடம் பெப்ரவரி மாதம் முதல் ஒக்டோபர் மாதம் வரை கொழும்பு நாலந்தா கல்லூரி மற்றும் கெத்தாராம ஆர் பிரேமதாச சர்வதேச கிரிக்கெட் மைதானம் போன்ற இடங்களில் இடம்பெற்ற போது கலந்துகொண்டார்.

தற்போது இங்கிலாந்து மற்றும் வேல்ஸ் கிரிகெட் சபையின் தரம் *2* நடுவராக கடமையாற்றும் சிஹான் சுஹூட் இங்கிலாந்தின் சஸ்ஸெக்ஸ் பிராந்திய லீக்கின் முதல்தர நடுவருமாவார்.

மூதூர் மத்திய கல்லூரி, திருகோணமலை இ.கி.ச இந்துக்கல்லூரி மற்றும் மாவனல்ல சாஹிறா கல்லூரிகளின் பழைய மாணவரான சிஹான் சுஹூட், மூதூர் வெஸ்டன் வோறியஸ் அணியின் தலைவரும், திருகோணமலை நடுவர்கள் சங்கத்தின் சிரேஷ்ட உறுப்பினரும், மூதூர் யூ.டி.பி.எம் அமைப்பின் நடுவரும் பயிற்றுவிப்பாளரும் ஆவார். இத்தெரிவிற்காக இலங்கை கிரிக்கெட் தரம் *4* இல் அங்கம் வகிக்கும் *162* நடுவர்கள் பங்குபற்றியமை குறிப்பிடத்தக்கது.

## சச்சின், சாஸ்திரிக்கு பின்
## ஜெய்ஸ்வால் தனித்துவமான சாதனை




இங்கிலாந்துக்கு எதிராக இந்திய கிரிக்கெட் அணி விளையாடும் *2* ஆவது டெஸ்ட் போட்டி இன்று விசாகப்பட்டினத்தில் துவங்கியது. *5* போட்டிகள் கொண்ட இந்தத் தொடரின் முதல் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது.

நங்கூரமாக நின்ற மற்றொரு துவக்க வீரர் யசஸ்வி ஜெய்ஸ்வால் கடந்த போட்டியைப் போலவே நேர்த்தியான ஆட்டத்தை வெளிப்படுத்தி அரைசதம் அடித்தார். குறிப்பாக, கடந்த போட்டியில் அதிரடியாக விளையாடி *80 (76)* ஓட்டங்கள் விளாசிய அவர் சதத்தைத் தவற விட்டது இந்திய அணிக்குப் பின்னடைவாக அமைந்தது.

ஆனால், இப்போட்டியில் அதற்கு நேர்மாறாக நிதானமாக விளையாடிய அவர் அவசரமில்லாமல் பொறுமையுடன் விளையாடினார்.

*2023* ஆம் ஆண்டு வெஸ்ட் இண்டீஸ் மண்ணில் நடைபெற்ற டெஸ்ட் தொடரில் அறிமுகமாகி முதல் போட்டியிலேயே சதமடித்த அவர் தற்போது இந்திய மண்ணிலும் சதமடித்துள்ளார். இதன் வாயிலாக டெஸ்ட் கிரிக்கெட்டில் வெறும் *22* வயதிலேயே வெளிநாட்டு மண்ணிலும் சொந்த மண்ணிலும் சதமடித்த *3* ஆவது இந்திய வீரர் என்ற தனித்துவமான சாதனையும் அவர் படைத்துள்ளார்.

ரவி சாஸ்திரி மற்றும் சச்சின் டெண்டுல்கர் ஆகிய ஜாம்பவான்களும் தங்களுடைய *22* வயதுக்குள் வெளிநாடு மற்றும் இந்திய மண்ணில் சதமடித்துள்ளனர்.

இப் பத்திரிகையானது பருத்தித்துறை வீதி, நெல்லியடியில் அமைந்துள்ள Needa media corporation (PVT) LTD இனால் 02.02.2024 அன்று வெளியிடப்பட்டது.